Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 01/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மனோபாலன் | Father Name | : | மனோகரன் |
| Village | : | கோவிந்தகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | | Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30th day of October 2025.

எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது ஊர்காரர்கள். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.1க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையில் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

போலீசார் விசாரணையில் கடந்த 19.06.2024ம் தேதி மதியம் 01.00 மணியளவில் அ.சா.1ன் வீட்டருகே நானும் சரவணன் என்பவரும் சென்று கொண்டிருந்தபோது அங்கு வந்த வலங்கைமான் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் அ.சா.1க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையில் பிரச்சனை நடந்த சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார் என்றும் அந்த பார்வை மகசரில் நானும் சரவணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2025.10.30 18:30:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.